# புலத்கொஹூபிடிய பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலி 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசம்பர் மாதம் 31 திகதிக்கு இருப்புக் கணிப்பீட்டின் போது கண்டறியப்பட்ட 82 நூல் நிலையப் புத்தகங்களின் குறைவுக்குரிய பெறுமதியினை அறவிடுவதற்கோ கணக்குகளிலிருந்து பதிவளிக்கவோ நடவடிக்கை மேற் கொண்டிருக்காததுடன் ரூபா. 22,000 பெறுமதியான இருப்புப் பொருட்கள் 02 வகையின் குறையினை கணக்குகளில் சீரமைத்திருக்கவில்லை.

(ஆ) தளபாடம் மற்றும் பொருத்துதல் கணக்கு மீதி மற்றும் அதற்குரிய உப அட்டவணையின் மீதிக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டினை சரியாகக் கண்டறிந்து சீரமைக்காது நாட்குறிப்பு மூலம் ரூபா. 271,371 வினை தளபாடம் மற்றும் பொருத்துதல் கணக்குற்கு செலவு வைத்தும் மற்றும் திரண்ட நிதிக் கணக்கில் வரவும் வைக்கப்பட்டிருந்தது.

(இ) மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்பு மீதி ரூபா. 74,335,530 மற்றும் நிலையான சொத்துக் கணக்கு மீதி ரூபா. 73,664,340 க்கும் இடையில் ரூபா. 671,190 வேறுபாட்டினை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுல் மத்திய அரசாங்கத்தினாலும் மற்றும் மாகாண சபை ஒதுக்கீட்டின் கீழ் கிடைப் பெற்ற ரூபா. 53,011,073 விற்கு அபிவிருத்தி நடவடிக்கைககள் மேற் கொண்டிருந்தாலும் அதனை நிதி மற்றும் செயற்பாடு தொடர்பான கூற்றில் வருமானம் மற்றும் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதிக்குரிய முத்தரைக் கட்டணம் ரூபா.2,036,012 சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தும் ரூபா. 1,468,937 வினைக் கிடைக் வேண்டியதாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததனால் திரண்ட நிதியம் மற்றும் கடன்பட்டோா் கணக்குகளில் ரூபா. 567,075 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீண்டுவரும் செலவு வகையினையுடைய பழுதுபார்தல், பராமரித்தல் மற்றும் விநியோக சேவை செலவுகளின் கூட்டுத் தொகை ரூபா. 1,340,148 இனை 04 மூலதன செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 05 மூலதன செலவு விடயங்களுக்குரிய ரூபா.2,599,484 அதற்குரிய சொத்துப் பதிவேட்டில் பதிந்து மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கும் மற்றும் அதற்குரிய சொத்துக் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 ஆம் வருடம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் அவதானிக்கப்பட்ட தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தினால் பெறப்பட்ட கடன் தொடர்பாக 2015 ஆம் வருடத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா. 249,753 வினை கணக்கீடு செய்யப்படாததன் தாக்கத்தினை சீராக்கம் செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டு மொத்தம் ரூபா. 2,661,249 ஆவதுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 2,255,691 ஆக இருப்பதுடன் ரூபா. 405,558 வேறுபாடாக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் 01 வருடத்திற்கு மேலான காலங்கடந்த பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையாக ரூபா. 2,538,288 மற்றும் ரூபா.1,854,066 ஆகும்.

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி. 371<br>2011 | 2012 செப்டெம்பர் முதல் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் ரூபா. 69,038 2017 ஏப்ரல் 25 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணக் கோவை2011 நி.பி. 571 | 2011 வருடத்தில் இருந்து 2014 ஆம் வருடம் வரையிலான காலப்பகுதிக் குரிய மொத்தக் கூட்டுத் தொகை ரூபா. 1,678,856 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 3,443,871 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 582,054 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 2,861,817 அதிரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 2,861,817 தொகை அதிகரிப்புக்கு 04 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.12.31 இல் நிலுவை<br>2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 188 | 113 | 1,064 | 902 | 75 | 162 | 237 |
| ii | வாடகை | - | - | 393 | 393 | | - | - |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 150 | 150 | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | - | - | 9,269 | 10,139 | - | (870) | (870) |
| | மொத்தம் | 188 | 113 | 10,876 | 11,584 | 75 | (708) | (633) |

(ஆ) சபையினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி, வரிப்பணம் மற்றும் குத்தகையினால் 2016 திசம்பர் 31 ஆம் திகதி பெற வேண்டிய மீதி ரூபா. 237,000 ஆயினும் நிதிக் கூற்றின் படி அம் மீதி ரூபா. 201,600 ஆகும்.

2.3.2 வரிப்பணம்

சபைக்குரிய வரிப்பணச் சொத்துக்கள் 2009 ஆம் வருடம் யடியன்தொட்ட பிரதேச சபையினால் உரிமையாக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்தை மீள மதிப்பீடு செய்யவோ மற்றும் வரிப்பணக் கட்டணம் மறுசீரமைக்க நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

2.3.3 வேறு வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 08 தொழில்கள் தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளததுடன் அது தொடர்பாக சபை தேவையான நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார வரி

14 வியாபார நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டுக் குரிய வியாபார வரி அறவிடுவதற்கு சபை தேவையான நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(இ) தொலைத் தொடர்பு கோபுர வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் 1597/8 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் படி அதிகார எல்லைக்குள் நிர்மானிக்கப்படுகின்ற தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக உயரம் 5 – 20 மீட்டருக்கு இடையில் ரூபா. 20,000 மற்றும் அதிகரிக்கும் ஒவ்வொரு மீட்டருக்கும் ரூபா. 100 ப் படி செயன் முறைக் கட்டணம் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடவேண்டியிருந்தும் எல்லைக்குள் நிர்மானிக்கப்பட்டிருக்கின்ற கோபுரம் தொடர்பாக ஆய்வு மேற்

கொண்டு வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) தொலைத் தொடர்பு நிறுவனங்களிலிடமிருந்து வருடாந்த வியாபார வரி ரூபா. 3,000 படி அறவிட வேண்டியிருந்தும் பிரதேசத்துக்குள் 03 தொலைத் தொடர்பு கோபுரங்களுக் குரிய ரூபா. 9,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>செயற்திறன்</u>

புலத்கொஹுபிடிய நகரத்தின் வாரச் சந்தை நிலத்தினை அபிவிருத்தி செய்வதற்கு 2014 ஜனவரி அரச பொறியாளர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்தும் 2017 மே வரையிலும் அவ் வாரச் சந்தை நிர்மானம் முடிவுற்றிருக்கவில்லை. மேலும் வாரச் சந்தை நடாத்திச் செல்வதற்காக வாரச் சந்தை நடாத்தப்படும் நாள்ளொன்றுக்கு ரூபா. 5,000 படி நிலத்தினை வாடகைக்கு எடுப்பது தொடர்பாக 2014 ஆம் வருடம் முதல் 2016 திசம்பர் வரையான காலப்பகுதிகக்காக ரூபா. 720,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) பழைய கிராம சபை நீதிமன்ற கட்டிடம் வழக்குத் தீர்ப்பு மூலம் 2015 ஆம் வருடம் கையேட்கப்பற்று ரூபா. 3,180,000 பெறுமதி கணக்கிடப்படடிருந்தும் அப் பெறுமதி தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா. 21,469,814 மதிப்பீட்டின் அடிப்படையில் தகனம் செய்யும் இடம் அமைப்பதற்கு அரச பொறியாளர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 மார்ச் 01 ஆம் திகதி தகனம் செய்யும் இடம் அமைத்து முடிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட பாதை அபிவிருத்தி உட்பட பொது வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாததன் காரணமாக தகன நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா. 59,700 பெறுமதியான ஊழியர் பிணை வைப்புப் பணம் ஒவ்வொரு ஊழியரின் பற்று வரவுப் புத்தகங்களில் வைப்புச் செய்வகற்கு பதிலாக பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு அதிகாரிகளிடமிருந்து அறவிடாது இருக்கும் ரூபா. 52,930 ஊழியர் கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) 07 பதவி வகைகளுக்குரிய 08 ஊழியர்களது பற்றாக் குறை காணப்படும் போதும் அது நிரப்பப்பட்டிருக்கவில்லை.

3.3 <u>கண்டறியப்பட்ட நட்டம்</u>

உடுவ பௌத்த விகாரைக் குரிய அனாதை நிலையத்திற்கு மலசலகூட வசதி வழங்குவதற்காக மலசலகூடம் அமைக்கும் வேலைத்திட்டத்தில் செயற்படுத்தப்படாத 03 வேலைகள் தொடர்பாக ரூபா. 9,563 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

3.4 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்.</u>

திண்மக் கழிவு முகாமை தொடர்பாக ரூபா. 4,506,739 மற்றும் திண்மக் கழிவு அகற்றுவதற்காக ரூபா. 650,306 என்ற அடிப்படையில் ரூபா. 5,157,045 மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் கொம்போஸ்ட் வேலைத் திட்டத்தின் கீழ் 2016 வருடம் ரூபா.3,360 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் ஆகும் போது கொம்போஸ்ட் கிலோ கிராம் 1,514 தொடர்பாக ரூபா.15,140 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

4.1 <u>உள்ளக கணக்காய்வு</u>

1988 பிரதேச சபை ( நிதி மற்றும் நிர்வாக) விதி 5(7) பிரிவின் படி நிதி மற்றும் இருப்பு தொடர்பாக போதுமான உள்ளகக் கணக்காய்வுவொன்று நடாத்திச் செல்லப்படவில்லை.

4.2 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

2016 பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் 06 சந்தர்ப்பம் தொடர்பாக மொத்தம் ரூபா. 8,325,000 நிதி ஒதிக்கீடு முழுவதும் மிகுதியாக இருந்ததுடன் செலவுவிடயங்கள் 12 தொடர்பாக நூற்றுக்கு 62 முதல் 96 வரை கூட்டுமொத்தம் ரூபா. 104,841,013 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

5. <u>முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</u>

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) 2015 ஆம் வருடம் கணக்காய்வாளர் நயகத்தின் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் மீளாய்வாண்டில் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) மோட்டார் வாகனம் மற்றும் இயந்திரம் வெவ்வேறாக கணக்கீடு செய்யப்யட்டிருக்கவில்லை. |
| | (iii) நாட்குறிப்புக்களின் விளக்கங்கள் தெளிவில்லாதது. |
| | (iv) காணி கட்டிடம் தொடர்பாக பதிவேடு நடாத்திச் செல்லாதது. |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | (i) சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) இருப்பு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதமானது. |
| (இ) நிதி மற்றும் வங்கி | வங்கிக் கணக்கிணக் கூற்று சரி செய்யப்படாத மீத காணப்படுவது. |
| (ஈ) வருமான நிர்வாகம் | (i) அபிவிருத்தி பிரதேசத்தில் கண்டறியப்பட்டிருந்தும் சொத்து மதிப்பீடு செய்து மதிப்பீட்டு வரி அறவிடப்படாதது |
| | (ii) நிலுவை வருமானம் காணப்படுவது. |